RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2236

# தாதன் கல்வெட்டு ஓர் ஆய்வு

முருகு தயாநிதி [அ,*]

[அ] தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை

# A study of the Dathan Inscription

Murugu Thayanithy [a,*]

[a] Department of Tamil Language, National Institute of Education, Sri Lanka

*Corresponding author Email: muruguthayanithy@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2236

Received: 19-06-2022; Revised: 13-08-2022; Accepted: 18-08-2022; Published: 27-08-2022

**Abstract:** The biographies and historical identities of the Tamils are given prominence in the form of inscriptions, manuscripts and pottery. There are many inscriptions and manuscripts in Batticaloa and Tamil Nadu in Sri Lanka. Thus, the Dathan inscription is one of the major inscriptions referring to the Batticaloa Prehistory and the Batticaloa Manmiyam. This inscription identifies Dathan who came to Batticaloa during the reign of Ethirmannasingan, the Kalinga king who ruled Batticaloa. Dathan, who came from Kongu Naadu in India and belonged to the Vaishnava religion, came here to teach the Pandavas about the exile. The Pandiruppu Thiraupadi Amman Temple is a continuation of this. In such a context, the Pandiruppu Thiroupathi Amman Temple is the first temple in Sri Lanka. Following this many Thiroupathi Amman temples were established in Batticaloa Tamil Nadu. Bharatanatyam is spread in the background of this Dathan inscription and one can also see the rhymes associated with the story of bharatha Ammanai that have arisen here. Following that, the goddesses are also beginning to write Bharat Goddess Ammanai, Vaikuntha Goddess Reading. All these goddesses have arisen in Batticaloa Tamil Nadu with the input of story of bharatham. It also shows the history of the Sinhala king Vimaladharmasooriya I who ruled Kandy and clarifies the grant given by the emperor to the Pandiruppu Thiroupathi Amman temple.

**Keywords:** Dathan, Inscription, Goddess, Koothu, Kings.

## முன்னுரை

மட்டக்களப்புத் தமிழகத்தில் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை ஆய்வு நோக்கில் முன்வைக்கப்பட்டதாக இல்லை. கடந்த வருடம் போடிகல்வெட்டுப் பற்றிய ஆய்வினை முன்வைத்து அதில் வரும் வரலாற்றுத் தடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளேன். "தாதன் கல்வெட்டு ஓர் ஆய்வு" என்ற கட்டுரை மட்டக்களப்புத் தமிழகத்தின் ஆய்வில் முரண்பாடாக உள்ள சிக்கல்களுக்கு தீர்வை வழங்கும் நோக்கிலும் அதில் வரும் ஆதாரங்களை எடுத்தக்காட்டும் வகையிலும் முன்வைக்கப்படுகின்றன. இந்தியாவின் கொங்கு சேசத்திலிருந்து தாதன் என்பவன் மட்டக்களப்புக்கு வருகின்றான். அக்காலம் மட்டக்களப்பினை எதிர்மன்னசிங்கன் ஆட்சி செய்த காலமாகும். தாதனுடைய வருகையினால் இங்கு திரௌபதி அம்மன் வழிபாடு எழுந்தமை கண்டுகொள்ளப்படுகின்றது. அத்தோடு, வைணவ வழிவபாடும் மேனிலையாக்கம் பெறுகின்றது. தொடர்ந்து பாரதக்கதை இங்கு மக்கள் மத்தியில் சென்றமையினால் அதனோடு தொடர்புடைய கூத்துக்களான கர்னன் போர், அபிமன்யு சண்டை, கடோற்கசன் பலி, திரௌபதி திருமணம், அருச்சுனன் வில்வித்தை போன்ற நூற்றுக்கு மேற்பட்ட கூத்துக்கள் எழத்தொடங்கி இன்றும் பயில் நிலையில் உள்ளன (Mounaguru, 1998). தாதன் காலம் வரையறுக்கப்படவில்லையாயினும் எதிர்மன்னசிங்கன் காலம் கி.பி.1538 - 1582 என்பதால் இத்தகைய கலம் தாதனுடைய வருகைக் காலம் என்பதனை மட்டக்களப்பு மான்மியம் போன்ற

வரலாற்று நூல்களும் ஆய்வு நூல்களும் வரையறுக்கின்றன. ஆனால், கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள் என்ற ஆய்வு நூலில் "திரௌபதி அம்மன் வழிபாட்டினை தாதன் ஏற்படுத்திய ஆண்டு கி.பி.1540 ஐ மையப்படுத்தவதாக அதன் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். எவ்வாறெனினும், தாதனுடைய வருகைக்காலம் குறிப்பிட்ட ஒருசில ஆண்டுகள் வேறுபடலாம். திரௌபதி அம்மன் வழிபாடு ஏற்படுத்தப்பட்ட காலத்தினைத் தொடர்ந்து பாரதக்கதை மட்டக்களப்புத் தமிழகத்தில் இருந்து இலங்கையின் பல பிரதேசங்களுக்கும் பரவியது. அதனால் பாரதக்கதையுடன் தொடர்புடைய கூத்துக்களும் பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, வைகுந்த அம்மானை போன்ற அம்மானைகளும் எழுந்தன. பாரத அம்மானை படித்தல், கஞ்சன் அம்மானை படித்தல் இன்றும் அக்கோயில்களில் இடம்பெறுகின்றன. மேலும் மரண வீடுகளில் வைகுந்த அம்மானை படிக்கும் வழக்கமும் இக்காலத்தினைத் தொடர்ந்தே ஏற்பட்டிருக்க வேண்டும். அத்தோடு இராமர் அம்மானை படிக்கும் வழக்கம் இருந்திருக்கின்றது.

## ஆய்வு நோக்கம்

தாதன் கல்வெட்டினை ஆராய்வதன் வழி, தாதனுடைய வருகையின் பின்னணியில் மட்டகளப்புத் தமிழகத்தில் காணப்படும் திரௌபதி அம்மன் வழிபாட்டின் தோற்றம், பாரதக்கதை படித்தல், பாரதம் தொடர்பான கூத்துக்களின் ஆற்றுகை, அரசர்கள் மானியம் வழங்கியமை போன்ற விடயங்களை அடையாளப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு அணுகுமுறைகள்

இந்த ஆய்வானது வரலாற்று அணுகுமுறை சார்ந்தத்கும். கொங்கு நாட்டில் இருந்து வந்த தாதன் பற்றியும், இலங்கையின் ஆட்சியாளர்களான விமலதர்மசூரியன், (கண்டி மன்னன்) எதிர்மன்னசிங்கன் (மட்டக்களப்பு மன்னன்) போன்றவர்களுடைய ஆட்சி பற்றிக் கூறப்படுவதாலும், பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலின் தோற்றம் அதனோடினைந்த வரலாற்றுத் தடயங்கள், பாரதக்கதையின் பரவல், அதன் ஆற்றுகை என்ற பல்வேறு பரப்புகளையும் விளக்கி நிற்பதனால் வரலாற்று அணுகுமுறையும் அதனோடு பல விடயங்களை ஒப்பீட்டுப் பார்ப்பதனால் ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறையும் இந்த ஆய்வுக்கான அணுகுமுறைகளாக அமைகின்றன.

## ஆய்வுப் பயன்கள் மற்றும் கலந்துரையாடல்

## தாதன் கல்வெட்டு

"மேவு புவுலகில் திருமாலமைந்த வெழுங்கைப்பார்
மேவுதாதன் பகுக்க மனதிலுன்னி
அரியோன் பத்தை அடி பணிந்து தெண்டனிட்டு
குருவின் கையில் குதித்தோர் சரித்திரத்தை
மடலில் வரைந்து மனதை ஒருமைப்படுத்தி
கொடையில் சிறந்த குகனிடத்தில் செல்லவென்று
காவி உடுத்திக் கமண்டலமும் கைப்பிடித்து
ஆவி அடக்கி அஞ்செழுத்தை உச்சரித்துப்
பல்லோர் புகழப் பாருலகோர் ஈடேறப்
வில்விசையன் செய்தவத்தை மேன்மைபெறக் காசினியில்
பத்ததிபோற்காட்டி பகுத்தறியத் தாதனுந்தான்
சுற்றம் மகிழத் துதித்தெழுந்து தென்னிலங்கை
சென்று மட்டுமா நகரில் திருக்கோவில்

சந்நிதியைக் கண்டு நமஸ்கரித்துக் கைகூப்பி நிற்கையிலே
கலிங்ககுலத்துக் காவலனும் அப்பொழுது
இலங்கு திருப்பணிக்கு இடுபூசை காணையிலே
பரதநாட்டில் பிறந்தான் எனவறிந்து பார்வேந்தன்
இரதநடவீதி எனும் இடம்வரவழைத்து
எதிர்மன்னசிங்கமெனும் எனும் நரபதியும்
கதிதங்கும் இப்பதியில் கண்டதில்லை உந்தனைத்தான்
ஆர நீரறையும் அந்தணனோ சுந்தரஞ்சேர்
பேரேது ஊரேது பெருமையுடனோது மென்னத்
தாதன் மனம் மகிழ்ந்து தாரளந்த மாயவன்றன்
பாதம் பணிந்து பரிவுடனே ஓதுகின்றான்
கோங்குநகர் மேவுங் கோவசியர் தன்குலத்தில்
பாங்குடனே நானுதித்துப் பாரதமென்றேர் மதத்தை
வங்கம் கலிங்கம் மலையாள புத்திபுரம்
அங்கங்கு சென்று அரியோன் அடியார்க்கு
காட்டியபின் தென்னிலங்கைக் கலிங்க குலத்தோர்க்கு
சூடநினைவுகொண்டு துளசிமணி மாலையிட்டு
வந்தேனெனது மரபிதென்ன மன்னவனும்
சந்தோஷமாகித் தாதன்றனைத் தழுவி
வடவால் நிறைந்திருக்கும் வனமும் கடலருகும்
அடவாகத்தேடி ஆழி அருகாய் வரவே
கண்டார்கள் ஆல் வனத்தைக் கடலுமருகிருக்க
தொண்டார் தாதன் துதித்து நமஸ்கரித்து
பஞ்சாட்சரத்தைப் பதித்து மனத்தொன்றாக்கி
கஞ்சன் முதலாக ஐவர் விந்தஞ் சேர்ந்தமட்டும்
தீட்டி ஒளியாக்கித் தீ வளர்த்துப் பாய்ந்த பின்பு
காட்டி முறைப்படியே கலிங்க குலத்தோர்க்கு
வரிசை கொடுத்து மாலப் பதத்தைச் சேர்ந்த பின்பு
கரிசனையோடு நம்பி சிறைகட்டுவற்குச் சட்டமுடன்
தீர்த்து எதிர்மன்னசிங்கன் மனமகிழந்து
பார்த்தவர்கள் கொண்டாடப் பாரத்திற் சொன்னபடி
கம்பம் வனவாசம் கடல்குளித்துத் தீய்ப்பாய்தல்
அம்புவில்லும் தண்டுடனே ஐவர்கொலுவாக்கிவைத்து
ஆடலொடுபாடி ஆதி துரோபதிக்கு
மாடமுயர் கோவில் வரிசையுடனி யற்றி

கும்பிட்டார் தெண்டனிட்டார் குவலயத்தைக் காருமென்றார்
தம்பட்ட சல்லாரி தாரை சின்னஞ் சாங்குதொனி
உடுக்குச் சிலம்புமணி ஒளிதங்கு தீபமெழ
அடுக்குமுறையோர டரவான் களப்பலியும்
பத்ததிபோற்காட்டிப் பணிக்கன் குலத்தோர்க்கு
உற்றபுகழ் மேவ உங்களுக்கே முன்னீடு
ஈந்தேன் இலங்கை எங்குமுயர்ந்தோங்க
ஆய்ந்து பணிசெய்கென் றகல மன்னனப் பொழுது
பதிணென் வரிசை யொடு பத்தும் பதியுடனே
மதிவெண்ணொளி பரப்ப மாயோன் மதமோங்க
கண்டோர் களிகூரக் காசினியோர் கொண்டாடக்
என்றும் பாசிதமாயிப்பதியைப் பெற்றதினால்
ஆவினங்கள் வாழ அறமுயர்ந்து சாவி எழப்
பாவாணர் பாடப் பல்லுயிரெல்லாம் வாழ்க
மாதத்தில் மூன்றுமழை மட்டுநகர் பெய்துவர
என்றார் பணிக்கர்குலத்ததி னேந்தனிடம்
கண்டறிந்து மாயவன்றன் கருணைதனை யுண்மையென்று
விமலதர்மன் எனும் வேந்தன் மனமகிழ்ந்து
கமலவிழிக் கண்ணன் கருணைதங்கு மிப்பதிக்கு
வேண்டு வயல் நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்
தூண்டுதும்பிக் கோடுடனே சோதியெழ யீந்துமன்னன்
கண்டிநகர் சென்றார் காசினியோர் தாமறியப்
பண்டுமுறை என்றென்றும் பார்" (Kamalanathan, 2002).

## தாதன் வருகை

கொங்குநாடு என்பது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள ஒரு மண்டலம். இதை கொங்கு மண்டலம் என்றும் அழைப்பர். சேரர்களால் ஆளப்பட்ட இப்பகுதியானது, கிழக்கில் தொண்டை நாடும், தென் கிழக்கில் சோழ நாடும் மற்றும் தெற்கே பாண்டிய நாடு ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. இந்தக் கொங்கு நாட்டைச் சேர்ந்த தாதன் என்பவன் தனது குழுவினருடன் கலிங்கம், வங்காளம், மத்தியநாடு, மலையாளம் போன்ற பல்வேறு இடங்களில் பாரதக் கதையினை மக்கள் மத்தியில் பரப்பும் கோக்குடன் அதனை நாடகமாக நடித்துக் காட்டிப் பின்னர் இலங்கை வருகின்றான். இலங்கையில் அவன் வந்து இறங்கிய இடம் மட்டக்களப்பாகும். அங்கிருந்து திருக்கேவிலுக்குச் செல்கின்றான். திருக்கோயில் என்பது ஊரையும் ஆலயத்தையும் குறித்து நிற்கின்து. ஆரம்பத்தில் சிவலிங்கம் மூலமூர்த்தியாக இருந்துள்ளது. தற்போது அக்கோயில் முருகன் கோயிலாக உள்ளது. திருக்கோயிலில் உள்ள சிவலிங்கத்தினை இராவணன் தரிசித்திருக்கின்றான். தாதன் வரும்போது குருவம்சத்தினருடைய சரித்திரமான பாரதக்கதையினை எழுதிக் கொண்டு வந்திருக்கின்றான். இவன் காவி உடை தரித்துக், கமண்டலம் கையில் கொண்டு, சிவாயநம எனும் மந்திரத்தை உச்சரித்து மட்டக்களப்பினை அடைந்திருக்கின்றான். இவன் கோவசியர் குலம் என்றும் பாரதக்கதையினைப் பல தேசங்களுக்குப்

பரப்பியமையினையும் கண்டுகொள்கின்றோம். ஆகவே, விஷ்ணு வழிபாடு இருந்தபோதும் பாரதக்கதை இவனுடைய காலத்தைத் தொடர்ந்து பரப்பப்பட்டிருக்கின்றன போலும்.

### மட்டக்களப்புத் தமிழக அரசியல்

மட்டக்களப்புத் தமிழகத்தின் அரசியல் ஆட்சி பண்டுதொட்டு தொடர்ந்த வண்ணம் இருந்துள்ளமையினை மட்டக்களப்பு பூர்வசரித்திரம் போன்ற நூல்கள் அடையாளப்படுத்துகின்றன. இலங்கையின் தமிழ் முதல் மன்னன் இராவணனைத் தொடர்ந்து விஜயன் ஆட்சியும் தேவநம்பியதீசன், எல்லாளன், துட்டகைமுனு என்ற தொடரில் சோழமன்னர்கள், கலிங்கமாகோன் என்று ஆட்சி தொடர்கின்றது. இதனைத் தொடர்ந்து கண்டி தலைநகரமாகின்றது. கண்டி சிங்கதூபம் எனும் பெயருடன் இருந்த கண்டி, பின்னாளில் கண்டி என்ற பெயருடன் தலைநகரமாகின்றது. கண்டி தலைநகராக இருப்பது பொருத்தமில்லை என்று மாருதசேன் செய்த கலகத்தால் மீண்டும் தோப்பாவை தலைநகரமாகின்றது. தொடர்ந்து மாருதசேனன் புத்திரனான எதிர்மன்னசிங்கன் (கி.பி.1538) முடிசூடுகின்றான். இவன் மட்டக்களப்புத் தமிழகத்தினை நாற்பத்திநான்கு வருடங்கள் ஆண்ட கடைசி கலிங்க மன்னனாவான். இம்மன்னனுடைய ஆட்சிப்பரப்பு தோப்பாவை என்று அழைக்கப்பட்ட பொலநறுவை தொடக்கம் இன்று கதிர்காமத்திற்கு அண்மையில் இருக்கும் கட்டகாமம் வரை இருந்தது (Vellaboorgopal, 2011). இம்மன்னனுடைய காலத்தில் ஏரிகள் செப்பனிடப்பட்டு, கல்விச்சாலைகள் அமைக்கப்பட்டு. சிவாலயங்கள் செப்பனிடப்பட்டு இங்கு ஆறுகாலப்புசைகளும் நிகழ்ந்தன (Nadarajah, 2000). இவ்வாறான தன்மையில் அவனது ஆட்சி நீட்சிபெறும் காலத்தில் திருக்கோயிலில் தாதனைச் சந்திக்கின்றான். தாதனைச் சந்தித்த எதிர்மன்னசிங்கன் அவனது வருகையினது நோக்கை விளக்கும்படி கேட்கின்றான்

### பாரதக்கதை

மட்டக்களப்புத் தமிழகத்திலே பாரதக்கதை நிகழ்த்து கலையாக இன்றும் இடம்பெறுகின்றது. அத்தோடு அம்மானை படித்தல் என்ற தன்மையிலும் அதன் பக்தி நீள்கின்றது. தாதன் வருகையின் நோக்கம் பாண்டவர்களின் வரலாற்றுக் கதையுடன் வைணவ சமயத்தினை மக்கள் மத்தியில் பரப்புவதாகும். பாரதக்கதையின் சுருக்கத்தினை எதிர்மன்னசிங்கனுக்கு எடுத்துக்கூறியபோது அதனை அம்மன்னன் வரவேற்கின்றான். அதனை மக்களுக்கு விளக்கிக் காட்டுவதற்காக ஓர் இடம் தெரிவு செய்யப்படுகின்றது. அதுதான் இன்று காணப்படும் பாண்டிருப்பில் திரௌபதி அம்மன் ஆலயம் அமைந்திருக்கும் இடமாகும். அந்த இடம் கடலுடன் காடு நிறைந்திருந்தது. அந்த இடத்தில் பாண்டவர்களுடைய உறுப்பை அறுபேருக்கு உண்டாக்கி, தீ வளர்த்து இதில் இறங்கி பக்தியினைக் காண்பித்தான். அதனைப் பார்த்து வியப்புற்ற அரசன் அந்த இடத்தில் கோயில் உண்டாக்கி வங்கர் குலத்து திக்கதிபர்களைப் பரிபாலிக்கும்படி அங்கிருந்து செல்கின்றான். இன்றும் திரௌபதி அம்மன் ஆலயங்களில் அருச்சுனன் கம்பம் ஏறுதல், பாண்டவர் வனவாசம் செல்லுதல், தீமிதித்தல், தீர்த்தமாடல் என்று அதன் செயற்பாடு நீள்கின்றது. இது ஒரு சடங்காகும். திரௌபதி அம்மன் சடங்கினை இன்று தீச்சடங்கு, தீப்பள்ளயம் என்று அழைப்பது சிறப்பு இத்தகைய சடங்குமுறை இன்று திரௌபதி அம்மன் கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றது.

இந்த வரலாற்றுப் பதிவில் ஒரு விடயம் தெளிவாக விளங்குகின்றது, இலங்கையில் மட்டக்களப்புத் தமிழகத்திலே முதலாக இந்த பாரதக்கதை தாதன் மூலம் வருகின்றது. அதனைத் தொடர்ந்து அக்கதை நாடகவடிவில் காட்டப்பட்டிருககின்றது, எதிர்மன்னசிங்கன் அக்கதையினைக் கேட்ட பின்னர் அதற்கு ஆலயத்தின் வழி செயல்வடிவம் கொடுத்திருகின்றான், அதனைத் தெடர்ந்து மட்டக்களப்புத் தமிழகத்தில் இன்றும் பயில்நிலையில் உள்ள பாரதக்கதையுடன் தொடர்புடைய பல கூத்துக்களும் தோற்றம் பெற்றிருக்கின்றன. இதனால் சடங்கில் இருந்து நாடகம், கூத்து தோன்றியது என்பர் போலும்.

### வைணவ சமயம்

மட்டக்களப்புத் தமிழகத்தில் ஏனைய தெய்வ வழிபாடுகளைக்காட்டிலும் விஷ்ணுவழிபாடு மக்களிடத்தே மேல்நிலையாக்கம் பெற்றதாக இல்லை. எனினும், ஆரம்பகாலத்தில் விஷ்ணு

வழிபாட்டுக்கான தன்மைகள் இருந்துள்ளமையினை புவனேசர் திருக்கோவில் கல்வெட்டு பாடல்கள் மூலம் அறிகின்றோம். இன்று மட்டக்களப்புத் தமிழகத்தி புதூர் விஷ்ணுகோவில், வந்தாறுமூலை விஸ்ணுகோயில் என்பன பழமைவாய்ந்த ஆலயங்களாக நிற்கின்றன. அத்தோடு காயாங்கேணி, பட்டியச்சேனை, கிண்ணியடி, களுவாஞ்சிகுடி, குருக்கள்மடம் பேன்ற கிராமங்களில் விஷ்ணுவழிபாடு நிகழ்கின்றன. எனவே, இந்த வழிபாடுகள் தாதனுடைய வருகையினைத் தொடர்ந்து உருவானதாகவே அமையப்பெறுகின்றன. தாதனும் கோவசியர் குலத்துடையவனாக இருப்பதனால் அவனுடைய வருகையினால் இவ்வழிபாடும் மேன்மையடைகின்றதென்றே கூறலாம். எனினும், இலங்கையில் பண்டைய காலமிருந்து இவ்வழிபாடு பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வழிபாட்டின் தொன்மை வேதம், வைனவ ஆகமம், இதிகாசம், புராணம், பிரபந்தங்கள் என்று பல இலக்கியங்களில் மூழ்கின்றது.

### பாரதம் படித்தல் அல்லது தீப்பள்ளயம்

தாதன் நிகழ்த்திக்காட்டிய கம்பம், வனவாசம், கடல்குழித்து, தீர்த்தமாடல் என்ற சடங்குமுறை இன்றுவரையும் சில விடயங்கள் முன்பின் மாறுபட்டு இடம்பெற்றுவருகின்றன. இலங்கையில் உள்ள திரௌபதி அம்மன் கோயில்களில் சிறிய வேறுபாடுகளுடன் சடங்கு இடம்பெறுகின்றன. இதனைப் பாரதப்படித்தல் என்று கூறுவார்கள். தமிழ்நாட்டில் இது பாரதவிழா என்று நிற்கின்றது. இன்றுவரையும் பாண்டிருப்பில் பதினெட்டு சடங்குகள் இடம்பெற்றுவருகின்றன. முதலாவது சடங்கு தொடக்கம் 6வது சடங்கு வரைக்கும் சாதாரண பூசைகளுடன் இடம்பெறுகின்றது. 7ஆம் சடங்கு நாராயணர் சிலை எடுத்துவரலும் 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் சடங்குகள் வழமை போன்றும், 12ஆம் சடங்கு கல்யாணக்கால் வெட்டுதலும் 13ஆம், 14ஆம், 15ஆம் சடங்குகள் வழமைபோன்றும் 16ஆம் நாள் சடங்கு வனவாசம் செல்லுதலும், அச்சடங்கில் அஞ்ஞாதவசம் இருக்கும் காட்சியும் இடம்பெறும். 17ஆம் சடங்கு தவநிலைச் சடங்காகவும் இடம்பெறும். இச்சடங்கில் இரவு 3.30 மணியளவில் அரவான் களப்பிலி இடப்படுவான். 18வது சடங்கில் ஆலய முன்றலில் தீ மூட்டப்பட்டு பி.ப.6.00 மணியளவில் தீமிதிப்பார்கள். அதனைத் தொடர்ந்து கடலுக்குச் சென்று தீர்த்தமாடி பாரதப்படிப்பு அல்லது தீப்பள்ளயச் சடங்கு நிறைவுபெறும். இன்று மக்களது வாழ்வியலில் திரௌபதி அம்மன் சடங்கு அல்லது பாரதப்படிப்பு என்பது தீப்பள்ளயம் என்ற தொடரிலே மூழ்கியுள்ளது (Mounaguru, 1998).

### பத்ததி / பத்தாசி

பத்ததி என்பது வரிசை, ஒழுங்கு, வழி, என்ற தன்மையில் நிற்கின்றது. மட்டக்களப்பு மாநிலத்திலே பத்ததியின் அடிப்படையில் கிராமியத் தெய்வச் சடங்கு இடம்பெறுவது வழக்கம். அடையல் பத்ததி, வால பத்தி என்று வரும் அச்சொல் பத்தாசி என்றே பயன்படுத்தப்படுகின்றது. தாதன் கல்வெட்டில்,

“வில்விசையன் செய்தவத்தை மேன்மைபெறக் காசினியில்

பத்ததிபோற்காட்டி பகுத்தறியத் தாதனுந்தான்”

என்று வருவதனால், தாதன் பாரதக்கதையினை ஒழுங்கு முறையிலே எழுதிக் கொண்டு வந்திருப்பது புலனாகின்றது. இப்பத்ததியில் அருச்சுனனுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அவனுடைய தவலிமையினை மக்களுக்கு காட்டுவதற்காக திரௌபதி வழிபாட்டில் அருச்சுனன் தவத்திற்குச் செல்லும் சடங்கு சிறப்பாக இடம்பெறுகின்றது. கம்பம் அமைத்து அதில் அருச்சுனனாகப் பாவனை செய்து தெய்வமேறி ஆடுபவர் தவத்திற்குச் செல்வார். இந்த தன்மையினை அருச்சுனன் தவசு என்ற ஆற்றுகலையிலும் கண்டுகொள்கிறோம். இந்த ஆற்றுகலை தமிழ் நாட்டில் தெருக்கூத்து வாயிலாகவும் இலங்கையில் மலையகத் தமிழர்களிடையே கூத்து என்ற தன்மையிலும் இடம்பெற்றுவருகின்றது. இந்த வரலாற்றுப் பக்திமிக்க செயல்கள் யாவும் ஒரு ஒழுங்குமுறையில் இடம்பெறுகின்றமையினால் இது ஒரு பத்தி. இன்று மட்டக்களப்புத் தமிழகத்தில் பத்ததி என்பது தனித்தன்மையில் நிற்கின்றது. சடங்கு செய்யும் முறையினை அடையாளப்படுத்தும் ஒழுங்குமுறையில் அமையும் ஏட்டினைப் பத்ததி என்பர். உதாரணமாக அம்பிலாந்துறையில் மாரியம்மன் சடங்கு சுப்பிரமணிய வால பத்தாசியின் அடிப்படையிலே நிகழ்கின்றது. இந்த மாரியம்மன் சடங்கு மட்டக்களப்புத் தமிழகத்திலே சிறப்பாக இடம்பெற்று வருகின்றது

## முதலாம் விமலதர்மசூரியன்

இலங்கை வரலாற்றில் கண்டி மன்னர்களின் ஆட்சி அரசியல் நிலையில் திருப்புமுனையினை ஏற்படுத்தியது. இலங்கையின் ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கேற்ப கி.பி. 1469 ஆம் ஆண்டு சேனாசம்மத விக்கிரமபாகு கண்டியினைத் தலைநகரமாக்குகின்றான். அவனைத் தொடர்ந்து சேனா சம்மத ஜயவீர (1511 - 1552), கரலியத்த பண்டாரசிங்கன் (1552 - 1582), முதலாம் இராஜசிங்கன் (1582 - 1592) ஆகிய மன்னர்கள் ஸ்ரீ சங்கபோதி வம்சத்தின் மன்னர்களாக முடிசூடுகின்றனர். இந்த ஆட்சியினைத் தொடர்ந்துதான் தினராச வம்சம் ஆட்சிப் பொறுப்பினை கி. பி 1592ஆம் ஆண்டு கைப்பற்றுகின்றது. இந்த வம்சத்தின் முதல் மன்னன் முதலாம் விமலதர்மசூரியன் ஆவான். அம்மன்னன் 1604ஆம் ஆண்டுவரையும் ஆட்சி செய்கின்றான். இவனது ஆட்சி போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் இலங்கையில் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இவனது காலத்தில் மட்டக்களப்பு மாநிலத்தின் மீது அவனது பார்வையும் பதிவும் இருந்திரக்கின்றமையினை தாதன் கல்வெட்டு மட்டுமன்றி, கொக்கட்டிச்சோலை கஞ்சிகூறும் கல்வெட்டும் தெளிவுபடுத்துகின்றது. இம்மன்னன் பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் கேவிலுக்குத் தேவையான வயல் நிலம், வெள்ளிக்களஞ்சியம் போன்ற மானியங்களை வழங்கி இருக்கின்றான்.

## காலமாறுபாடு

தாதன் கல்வெட்டினை அடிப்படையாக் கொண்டு வரலாற்றினைச் அடையாளப்படுத்திய ஆய்வாளர்கள், தாதன் இலங்கைக்கு வந்து பாண்டவர்களின் நிகழ்வினை நிகழ்த்திக்காட்டிய காலத்தில் பாண்டிருப்பு ஆலயம் உருவாகின்றது. அக்காலத்தில் பாண்டிருப்புக்கு வந்த முதலாம் விமலதர்மசூரியன் மானியம் கொடுத்து கண்டி சென்றதாகக் கல்வெட்டினை ஆதாரம் காட்டுவர்.

“கண்டறிந்து மாயவன்றன் கருணைதனை யுண்மையென்று

விமலதர்மன் எனும் வேந்தன் மனமகிழ்ந்து

கமலவிழிக் கண்ணன் கருணைதங்கு மிப்பதிக்கு

வேண்டு வயல் நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்

தூண்டுதும்பிக் கோடுடனே சோதியெழ யீந்துமன்னன்

கண்டிநகர் சென்றார் காசினியோர் தாமறியப்

பண்டுமுறை என்றென்றும் பார்” (Nadarajah, 2000)

இங்கு ஒரு வரலாற்று முரண்பாடு எழுகின்றது, அதாவது கண்டியின் தலைநகரினை விருபாத எதிர்மன்னசிங்கனின் தகப்பனாராகிய மாருதசேனன், மீண்டும் தோப்பாவைத் தலைநகரமாக்கி கலிபிறந்து நாலாயிரத்து அறுநூற்று நாற்பதாண்டில் எதிர்மன்னசிங்கனுக்கு பட்டங்கட்டுகின்றான். (கி.பி.1538 - 1582) எதிர்மன்னசிங்கனுடைய ஆட்சி கண்டி மன்னர்களுடைய ஆட்சியின் கீழ் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், மட்டக்களப்பு தனி அலகாகவே இருந்திருக்கின்றது. இவனுடைய காலத்தில் முதலாம் விமல தர்மசூரியன் கண்டிக்கு மன்னாகவில்லை. அவனது ஆட்சிக்காலம் பி.1592 - 1604 வரையாகும். எனவே, எதிர்மன்னசிங்கன் காலத்திலோ தாதன் காலத்திலோ முதலாம் விமலதர்மசூரியன் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலுக்கு மானியம் வழங்கவில்லை. அவன் கண்டிக்கு மன்னனான காலத்தில் இக்கோயிலைத் தரிசித்து, அதன் சிறப்பினை அறிந்து மேற்கண்ட மானியங்களை வழங்கி இருப்பது தெளிவாகின்றது.

## பாண்டிருப்பு என்ற பெயர் இடம்பெறவில்லை

தாதன் பாண்டவர்களுடைய உறுப்பை அறுபேருக்கு உண்டாக்கி, (பஞ்சபாண்டவர்களுடன் திரௌபதியுமாக) தீ வளர்த்து அதில் இறங்கி பக்தியினைக் காண்பித்த இடம் பாண்டிருப்புமுனை என்று அடையாளப்படுத்தப்படுகின்றது (Nadarajah, 2000). தாதன் கல்வெட்டில் அவ்வாறான பெயர் இடம்பெறவில்லை.

“வடவால் நிறைந்திருக்கும் வனமும் கடலருகும்

அடவாகத்தேடி ஆழி அருகாய் வரவே

கண்டார்கள் ஆல் வனத்தைக் கடலுமருகிருக்க”

என்ற தாதன் கல்வெட்டு அடிகளால், திருக்கோயிலுக்கு வடக்குப் பக்கமாக, கடலுடன் சேர்ந்திருக்கும் இடம் என்றே வருகின்றது. அந்த அடையாளத்தில்தான் பாண்டிருப்பு என்பது தெளிவாக் காட்டப்படுவதற்கான தன்மைகள் மீளெளுகின்றன. இத்தகைய தன்மைகளை வைத்துக்கொண்டே பாண்டிருப்புமுனை என்று சுட்டப்படுகின்றதென்ற தன்மையில் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

## அம்மானை

மட்டக்களப்புத் தமிழகத்திலே அம்மானைகள் பல தோற்றம் பெற்றிருக்கின்றன. அவற்றுள் இன்று ஏட்டிலிருந்து அச்சுவாகனம் ஏறியவையாக பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, வைகுந்த அம்மானை என்பன பாரதக்கதையினை முன்வைத்துப் பாடப்பட்டிருகின்றன அத்தோடு இராமர் அம்மானையும் வள்ளியம்மன் அம்மானையும் அடங்கும். அவற்றுள் கஞ்சன் அம்மானை விஷ்ணுவை முதன்மைப்படுத்தும் ஆலயங்களில் பாடப்படுகின்றன. குறிப்பாகப் புதூர் விஷ்ணு கோவிலில் சடங்கு இடம்பெறும் காலத்தில் இன்றுப் பாடப்பட்டு வருவது வழக்கம். பாரத அம்மானை திரௌபதி அம்மன் சடங்கு இடம்பெறும் காலத்தில் படிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், ஒரு மனிதனுடைய இறப்பின் பின்னர், அந்த வீட்டில் வைகுந்த அம்மானை பாடப்படுவது வழக்கமாக இருந்து வருகின்றது. ஒருவர் இறந்த பின்னர் அன்றிலிருந்து எட்டு நாள் வரைக்கும் சில கிராமங்களில் முப்பத்தியோர் நாள் வரைக்கும் பாடப்படும். இராமர் அம்மானை இங்கு விஷ்ணு ஆலயங்களில் பாடப்பட்டிருக்கின்றன.

அம்மானைகள் தொல்காப்பியர் காலத்தில் தோற்றம் பெற்றிருக்கின்றன. அவர் பண்ணத்தி என்ற வகையில் அதனை உள்வாங்குகின்றார் (Kamalanathan, 2005). அம்மானைகள் பற்றிய தெளிவு முதலில் சிலப்பதிகாரத்திலே பதிவாகின்றன. சிலப்பதிகார காலத்தினைத் தொடர்ந்து அம்மானைகள் எழுந்தபோதும் அந்த அம்மானைகள் நான்கு அல்லது ஐந்து அடிகளைக் கொண்டே அமைந்திருக்கின்றன. இந்த அம்மானைகள் இரண்டு அல்லது மூன்று பருவப் பெண்கள் சேர்ந்து ஆடும் விளையாட்டுக்களாக அமைகின்றன. இவ்வாறாக அமைந்த அம்மானைகள் மட்டக்களப்புத் தமிழகத்தில், ஒரு வரியில் நான்கு அல்லது ஐந்து சொற்களைக் கொண்டு, மூவாயிரத்திற்கு மேற்பட்ட வரிகளுடன் அமைகின்றன. இறைவனின் பல்வேறு நிலைகளையும் அவர் ஆன்மாக்களுக்கு உதவி அவர்களைக் காக்கும் அல்லது ஆட்கொள்ளும் முறைகளையும் இவ்அம்மானைகள் உள்ளீடாக் கொண்டுள்ளன. இவ்அம்மானைகள் பாரதக் கதையினை உள்ளீடாக் கொண்டு அமைந்திருப்பதனால் இந்த அம்மானைகளின் தோற்ற காலம் தாதன் வருகையினைத் தொடர்ந்தே இடம்பெற்றிருக்கின்றன என்பது புலனாகின்றது. மட்டக்களப்புத் தமிழகத்தில் திரௌபதி அம்மன் வழிபாட்டுடனே அம்மானைகள் பாடும் வழக்கமும் இருப்பதனால் ஆரம்பத்தில் பாரத அம்மானையும் அதனைத் தொடர்ந்து ஏனைய அம்மானைகளும் தோற்றம் பெற்றிருப்பதற்காக பின்னணியினைக் கண்டுகொள்ளமுடிகின்றது. பாரதக் கதையினைத் தாதன் எழுதிக் கொண்டு வந்துள்ளமையினால் அதனை வைத்து இந்த அம்மானைகளைப்பாடுவது இலகுவானதாக இருந்திருக்கும்.

## கூத்து

மட்டக்களப்புத் தமிழகத்தில் பாரத, இராமாயண கதையின் உள்ளடக்கத்தினை முன்வைத்து இருநூற்றுக்கு மேற்பட்ட வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன. இந்தக் கூத்துக்கள் எக்காலத்தில் மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆடப்பட்டன என்பதற்கான பொருத்தமான காலப்பின்னணி பற்றி ஆய்வாளர்களிடையே இன்றுவரை ஒத்தமுடிவுகள் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பாரதக் கதை தாதனுடைய வருகையினைத் தொடர்ந்தே மட்டக்களப்புத் தமிழகத்தில் இடம்பெற்றிருக்கின்றன. அப்படியானால் அக்காலத்தைத் தொடர்ந்தே அதனோடினைந்த தென்மோடி வடமோடிக் கூத்துக்களும் இங்கு இடம்பெற்றிருக்பதற்கான வாய்ப்பு அதிகமாகின்றன. காரணம், தோப்பாவையினைத் தலைநகராக் கொண்டு எதிர்மன்னசிங்கன் ஆண்ட காலம் கி.பி. 1538 - 1582 வரையாகும். அவ்வாறெனின் பாரத்கதை தாதன்மூலம் அறிமுகமாகிய காலத்தினைத் தொடர்ந்து பாரதக் கதையினை உள்ளீடாக் கொண்ட கூத்துக்கள் இங்கு எழுந்திருக்கின்றன எனலாம். தாதன்

இலங்கைக்கு வந்த ஆண்டு பற்றிய தெளிவு சரியாக இல்லையாயினும் எதிர்மன்னசிங்கனுடைய காலம் தெளிவாக அடையாளமாகின்றது. ஆனால், தாதன் வந்து பாரதக் கதையினை நிகழ்த்திக் காட்டிய காலம் கி.பி.1540ஆம் ஆண்டு என அறிகின்றோம். (வெல்லவூர்க்கோபால்: 2011) அவ்வாறாயின் இந்தக் காலத்தினைத் தொடர்ந்து கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டிருப்பதற்கான வாய்ப்பு அதிகமாகின்றது. மட்டக்களப்புத் தமிழகத்தில் அருச்சுனன் தவநிலை கூத்து, வாளபீமன் கூத்து, அபிமன்யு சண்டை, அரவான் களப்பலி, கர்னன் போர், துரோணர் வில்வித்தை, குருகேத்திரப்போர், பாண்டவர் வனவாசம், சுபத்திரை கல்யாணம், துரோபதை வில்வளைவு, போன்ற பல கூத்தக்கள் பாரதக்கதையின் உள்ளீடுகளை முன்வைத்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பில் உள்ளவர்கள் வைகுந்தம், வனவாசம் போன்ற கூத்துக்கள் பழமையானது என்பர். காரணம் தாதன் நிகழ்த்திக்காட்டிய நிகழ்வில் வனவாசம், வைகுந்தம் போவது பற்றிய கருப்பொருளே அமைந்திருந்தமையினையும் இங்கு கருத்தில் கொள்வது பொருத்தமாக அமையும். எனவே பாரதம் தொடர்பான கூத்துகள் தாதனுடைய நிகழ்த்துகையினைத் தொடர்ந்து நிகழ்ந்துள்ளதோடு அது 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே இங்கு நிகழ்த்தப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன. எனவே தாதனுடைய இக்காலம் பாரதக் கதையோடு இணைந்த கூத்துக்கள் எழுந்த காலம் எனலாம்.

## முடிவுரை

இந்த ஆய்வுக் கட்டுரை தாதன் கொங்கு நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தந்ததன் தொடர்ச்சியினால் திரௌபதி அம்மன் வழிபாடும் ஆரம்பமாகின்றது என்பதனை அடையாளப்படுத்தி, கொங்கு நாடு வடநாடு அல்ல அது தென்நாட்டின் பகுதியாகும் என்பதும், விஷ்ணு வழிபாடு பண்டைக்காலம் முதற்கொண்டு இடம்பெற்றிருந்தாலும் திரௌபதி வழிபாட்டினைத் தொடர்ந்தே சிறப்புப் பெற்றிருக்கின்றன என்பதும், பாரதக்கதையின் தொடர்ச்சியினால் பாரதம் தொடர்பான கூத்துக்களும் அம்மானைகளும் எழுந்ததோடு, அவை இன்றும் மக்களால் பக்தி பூர்வமாக பின்பற்றப்பட்டு வருகின்றமையும், அத்தோடு எதிர்மன்னசிங்கனின் ஆட்சி அதிகாரமும் அவன் இவ்வழிபாடு மேன்மைபெற அனுமதியளித்மையும் சிங்கள மன்னனாக இருந்தபோதும் அவனது ஆட்சிக்காலத்தில், முதலாம் விமலதர்மசூரியன் திரௌபதி அம்மன் கோயிலுக்கு வழங்கிய மானியம் பற்றியும் அதன் காலப் பின்னணி பற்றியும் கண்டுகொள்ளப்படுவதோடு, பாண்டிருப்பு என்று நேரடியாகச் சுட்டப்படாமையும் முதலாம் விமலதர்மசூரியன் காலமும் எதிர்மன்னசிங்கனுடன் இணைந்த தாதன் காலமும் மாறுபட்டு நிற்கின்றது என்பதும், மட்டக்களப்புத் தமிழகத்திலே காணப்படும் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை ஆராய்ச்சிக்கு உட்படாமலும் சில மேலோட்ட வாசிப்புக்களுடனும் உள்ளமையும், அக்கல்வெட்டுக்கள் அனைத்தும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றபோது வரலாற்றின் தடயங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடியும் என்பதற்குத் தாதன் கல்வெட்டு உதாரணமாக அமைகின்றமையும், பாரதக்கதை பரவியதைத் தொடர்ந்தே பாரதம் தொடர்பான கூத்துக்களும் அம்மானைகளும் அதனோடிணைந்த ஆற்றுகலைகளும் தோற்றம் பெற்றிருக்கின்றன என்பதோடு, கூத்து மற்றும் அம்மானையின் தோற்றம் பற்றி இதுவரை எழுந்த முரண்பாடுகளுக்கு இந்த ஆய்வு ஒரு தீர்வாக அமைகின்றமையும் கண்டுகொள்ளப்படுகின்றன.

## References

Kamalanathan, S.R., (2002) Baratha Ammanai, Department of Hindu Cultural Ministry, Colombo, Srilanka.

Kamalanathan, S.R., (2005) Batticaloa Archaeological History, Kumaran Book House, Colombo, Srilanka.

Mounaguru, S., (1998) Batticaloa Taditional Drama, Vipulam Publication, Batticaloa, Sri Lanka.

Nadarajah, F.H.C., (2000) Batticaloa Manmiyam, Kalanilayam, Sri Lanka.

Vellaboorgopal, (2011) Eastern Historical Literatures, Batticaloa, Sri Lanka.

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Murugu Thayanithy, A study of the Dathan Inscription, Indian Journal of Tamil, 3(3) (2022) 26-35. https://doi.org/10.54392/ijot2236